# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

## 2010 ஆம் ஆண்டு மே மாதம் 07 ஆம் திகதிய
## பகுதி II இற்குக் குறைநிரப்பி

(2010.05.10 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)


# புண்ணிய ஒழுங்கமைப்பு (கூட்டிணைத்தல்)

(தனியார் உறுப்பினர் சட்டமூலம்)

**புண்ணிய ஒழுங்கமைப்பைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**


கண்டி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க
அவர்களால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது



இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 8.00** **தபாற் செலவு : 5.00**

## புண்ணிய ஒழுங்கமைப்பைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

"புண்ணிய ஒழுங்கமைப்பு" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான நிறுவனமொன்று, அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க சொல்லப்பட்ட எல்லாக் கருமங்களையும் பயனுறநிறைவேற்றிக் கொண்டு நடாத்தும் நோக்கத்துக்காக தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் : முன்னுரை.

அத்துடன் சொல்லப்பட்ட நிறுவனம் எப்பல்வேறு குறிக்கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :

**1**. இச்சட்டம், 2010 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, "புண்ணிய ஒழுங்கமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டம்" என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

**2**. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "சங்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) புண்ணிய ஒழுங்கமைப்பின் தற்போதைய உறுப்பினர்களாக உள்ளவர்களும் அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக் கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "புண்ணிய ஒழுங்கமைப்பு" என்ற பெயரின்கீழும் மகுடத்தின் கீழும் இடையறாவழியுரிமை கொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருத்தல் வேண்டும். அத்துடன் அது அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதை மாற்றவும் அது முழுத் தத்துவமும், அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் வேண்டும். புண்ணிய ஒழுங்கமைப்பைக் கூட்டிணைத்தல்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3**. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) விசேடமாக படையினர் வைத்தியசாலை உட்பட சகல அரச வைத்தியசாலைகளுக்கும் நவீன வைத்திய உபகரணங்கள் மற்றும் அம்பியூலன்ஸ் ஆகியன ஜெர்மனி அல்லது ஏனைய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்தல் அல்லது நன்கொடையாகப் பெற்றுக்கொள்ளல் ;

(ஆ) பொருளாதார அல்லது நிதி ரீதியாக கஷ்டப்படும் மாணவ, மாணவிகள் உயர் கல்வியை மேற்கொள்வதற்காக அவர்களைத் தைரியப்படுத்தி உதவியளித்தல் ;

(இ) குறைந்த வருமானத்தில் வாழும் பிள்ளைகள், தாய் தந்தையர் இருவரையும் அல்லது ஒருவரை இழந்து கல்வி முயற்சிகளைத் தொடர முடியாத அபாக்கிய நிலையில் வாழும் பிள்ளைகளின் உயர் கல்வியைத் தொடருவதற்கு உதவியளித்து அவர்களை ஊக்குவித்து தைரியப்படுத்தல் ;

(ஈ) ஏழை எளிய மக்களுக்கு அவர்களின் இருதய அறுவைச் சிகிச்சை, சிறுநீரக மாற்று சிகிச்சை மற்றும் புற்றுநோய் சிகிச்சை போன்றவற்றுக்கு உதவி வழங்குதல் ;

(உ) அநாதை இல்லங்களையும் முதியோர் இல்லங்களையும் நிறுவுதலும், சமூக நலன்புரி நிலையங்களை நிறுவுதலும்;

(ஊ) குருடர், செவிடர், ஊமை மற்றும் அங்கவீனர்களுக்கு நலன்புரி நிலையங்களை நிறுவிப் பராமரித்தல் ;

(எ) வசதியற்ற மற்றும் ஏழைகளுக்கு நோயாளிகள் உபயோகிக்கும் கதிரை, மூக்குக்கண்ணாடி போன்றவை வழங்கல் ;

(ஏ) வீடற்ற மக்களுக்கு வீடுகளை அமைத்தல் மற்றும் வீடுகளை அமைத்து முடிக்கமுடியாமல் இருப்பவருக்கு வீட்டுவேலையை முடிப்பதற்கு உதவுதல் ;

(ஐ) கஷ்டப் பிரதேசங்களில் விவசாயத்துறையை அபி விருத்தி செய்தலும் அதற்குரிய டிராக்டர் வண்டி, கைடிராக்டர் வண்டி, காணி போன்றன பிரதேச செயலாளரூடாக வழங்க நடவடிக்கை எடுத்தல் ;

(ஒ) வசதியற்ற கஷ்டப் பிரதேசங்களிலுள்ள வைத்தியசாலை களுக்கு அம்பியுலன்ஸ் வண்டிகளை வழங்கல் ;

(ஓ) அரச பாடசாலைகளில் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பஸ்போக்குவரத்து வசதிகளை ஏற்பாடு செய்தல் ;

(ஔ) நூலகங்களை நிறுவிப் பராமரிப்பதுடன், நூல்கள், சஞ்சிகைகள், நினைவு மலர்கள் மற்றும் வார மஞ்சரி கள் போன்றவற்றை வெளியிடுதலும் விநியோகித்தலும், கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கைகளை நிறைவேற்று வதற்கு உகந்த ஏனைய சேவைகளை மேற்கொள்ளலும் ;

(க) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமானவாறான கண்காட்சிகள், சொற்பொழிவு கள், மாநாடுகள், தத்துவக் கருத்தரங்குகள், ஆய்வரங்கு கள், வகுப்புகள், விவாதங்கள், சம்மேளனங்கள், சுற்று லாக்கள், உல்லாசப் பயணங்கள் அல்லது வேறேதேனும் நடவடிக்கைகளை ஊக்குவித்தல், முறைப்படுத்தல், ஏற்பாடு செய்தல் அத்துடன் நடாத்துதல் ;

(ங) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக் கோள்களைக் கொண்ட வேறு ஏதேனும் மன்றங்கள், சங்கங்கள் அல்லது அமைப்புகளுடன் ஒத்துழைத்தலும் இணைதலும் ;

(ச) தற்போது இலங்கையில் காணப்படும் தற்கொலைகளை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் ; மற்றும்

(ஞ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்கள் எல்லாவற்றையும் அல்லது அவற்றில் ஏதேனுமொன்றை எய்துவதற்கு அவசியமானவாறான அல்லது இடைநேர்விளைவான வேறேதேனும் காரியங்களையும் கருமங்களையும் செய்தல்.

**கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.**

**4.** இச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்திற்கும் அமைய கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள் களை அல்லது அவற்றின் ஏதேனுமொன்றை மேம்படுத்து வதற்கும் முன்னேற்றுவதற்கும் அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தன்மையதுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும் காரியங்களையும் செய்வதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் கூட்டுத்தாபனம் தத்துவமு டையதாதல் வேண்டும். இத்தத்துவங்களுள் வங்கிக் கணக்குகளைத் தொடங்கவும், கொண்டு நடாத்தவும், முடிவுறுத்தவும், பிணைப் பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றி பணங்களை கடனெடுக்கவும் அல்லது திரட்டவும், சேகரிக்கவும், அதன் நிதியங்களை முதலீடுசெய்யவும் அத்துடன் கூட்டுத் தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான அலுவலர் களையும் சேவையாளர்களையும் வேலையிலீடுபடுத்துதல், வேலைக்கமர்த்துதல், வேலைநீக்கஞ்செய்தல் ஆகியவற்றுக்கான தத்துவங்களும் அடங்கும்.

**கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.**

**5.** (1) கூட்டுத்தாபனத்தின் முகாமையும் கட்டுப்பாடும் நிருவாக மும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக் கமைய (இதனகத்துப்பின்னர் “பேரவை” எனக் குறிப்பீடு செய்யப் படும்) ஆளும் பேரவையொன்றிற்கு உரித்தாக்கப்படுதல் வேண் டும். அப்போதைக்கு வலுவிலுள்ள கூட்டுத்தாபனத்தின் விதிகளுக் கிணங்க உறுப்பினர்களிடையே தேர்ந்தெடுக்கப்பட்ட அத்தகைய எண்ணிக்கையினரான ஆளுநர்களை இப்பேரவை கொண்டி ருத்தல் வேண்டும்.

(2) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர் முந்திய நாளன்று பதவிவகிக்கின்றவர்கள் கூட்டுத்தாபனத்தினது முதலாவது பேரவையின் உறுப்பினர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) பேரவை தேவையெனக் கருதின் புதிய உறுப்பினர்களை நியமிக்கவும் வெற்றிடங்கள் ஏற்படின் அவற்றை நிரப்பவும் பேரவைக்கு அதிகாரம் உண்டு.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**6.** *(1)* கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்ளுதல் மீளப்பெறுதல் அல்லது வெளியேற்றுதல் என்பவற்றுக்காகவும், பதவிதாங்குநர்களையும் குழுவின் உறுப்பினர்களையும் தெரிவுசெய்வதற்காகவும் பொதுவில் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமைசெய்வதற்கும் அதன் குறிக்கோள்களை எய்துவதற்காகவும், இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக்குக்காலம் பொதுக்கூட்டமெதிலும் சமுகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கினருக்குக் குறையாத உறுப்பினர்களின்வாக்குப் பெரும் பான்மைகொண்டு குழுவினால் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்கு சட்டமுறையானதாதல் வேண்டும். அத்தகைய விதிகள் ஆக்கப் பட்டதும் அதேபோன்ற கூட்டமொன்றில் அதேபோன்ற முறையில் அவை மாற்றப்படலாம் திருத்தப்படலாம் அல்லது நீக்கப்படலாம் அல்லது அவற்றுக்கு எதுவும் சேர்க்கப்படலாம்.

*(2)* இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்திற்கும் அமைய, கூட்டத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கும், முன்னேற்றுவதற்கும் அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும் செய்வதற்கும் புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் கூட்டுத் தாபனம் தத்துவத்தைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

நிதியத்தால் செலுத்தப்பட வுள்ளனவும் நிதியத்திற்குச் செலுத்தப்பட வுள்ளனவு மான கடன்கள்.

**7.** இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று நிதியத்திற்குரிய எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதலும் கொடுத்துத் தீர்க்கப்படுதலும் வேண்டுமென்பதுடன் அந்நாளன்று நிதியத்திற்கு வருமதியாகவுள்ள எல்லாக் கடன்களும் செலுத்தப்படுதற்குரிய ஒப்பப் பணங்கள், உதவு தொகைகள் ஆகியவனவும் இச்சட்டத்தின் நோக்கத் திற்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதிகள்.

**8.** *(1)* கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், கூட்டுத்தாபனத்துக்காகவும் கூட்டுத்தாபனத்தின் கணக்காலும் கொடை, அன்பளிப்பு, நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகை, இறுதி விருப்பாணவக் கையளிப்பு அல்லது கட்டணங்களாகக் கிடைக்கக்கூடிய எல்லாப் பணங்களும் நிறுவனம் தீர்மானிக்கும் ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழ் கூட்டுத்தாபனத்தின் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்படும் எல்லாச் செலவினங்களும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*கணக்குகளும் கணக்காய்வும்.*

**9**. (1) முகாமைச் சபையானது கூட்டுத்தாபனத்தினால் பெறப்பட்ட மற்றும் செலவழிக்கப்பட்ட எல்லாப் பணங்கள் பற்றியும் முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஒவ்வோராண்டும் ஆகக் குறைந்தது ஒரு தடவையாவது பரிசீலனை செய்யப்படுதலும் கணக்காய்வு செய்யப்படுதலும் வேண்டுமென்பதுடன், வருமான செலவினக் கணக்கினதும் ஐந்தொகையினதும் செம்மை, கூட்டுத் தாபனத்தால் நியமிக்கப்பட்ட இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் இணை உறுப்பினரொருவரான கணக்காய்வாளர் ஒருவரால் அல்லது கணக்காய்வாளர்களினால் அத்தாட்சிப்படுத் தப்படுத்தலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**10**. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, அப்போதைக்கு வலுவிலுள்ள கூட்டுத்தாபனத்தின் விதிகளில் ஏற்பாடு செய்யக் கூடியவாறான முகாமைச் சபையின் அத்தகைய எண்ணிக்கையைக் கொண்ட ஆட்களின் முன்னிலையிலன்றி எத்தகையதுமான சாதனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாதென்பதுடன், அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்குச் சான்றாக அச்சாதனத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும். அப்படிக் கையொப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்.*

**11**. கூட்டுத்தாபனம் ஏதேனும் கொள்வனவு, சந்தாப்பணம், நன்கொடை, மானியக்கொடை, இறுதி விருப்பாவணக் கையளிப்பு அல்லது வேறேதேனும் விதமாக அதற்கு உரித்தாக்கப்படக்கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனங்களை இந்தச் சட்டத்தின் நோக்கத்துக்காக கூட்டுத்தாபனத்தின் தற்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கு அமையப்பெறுவதற்கு வைத்திருப்பதற்கும் சட்டத்தில் இயலுமாதலும் ஆற்றலுடையதாதலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய எல்லா ஆதனங்களையும் விற்பதற்கும், ஈடுவைப்பதற்கும், குத்தகைக்குக் கொடுக்கவும், பரிமாறிக் கொள்ளவும், வேறு வகையில் கையுதிர்ப்பதற்கும் ஆன முழுத்தத்துவத்தைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

**12.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மேல் அதன் கடன்கள் பொறுப்புக்கள் அனைத்தையும் திருப்திப்படுத்திய பின்னர் ஏதேனும் சொத்து எஞ்சியிருந்தால் அத்தகைய சொத்து கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது. ஆனால், அது கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்ளையொத்த குறிக்கோள்கைக் கொண்டிருக்கும் பிறநிறுவனம் அல்லது நிறுவனங்கள் சிலவற்றுக்கு, அந்நிறுவனத்தின் அல்லது அந்நிறுவனங்களின் உறுப்பினர்களிடையே ஏதாவது வருமானத்தை அல்லது சொத்தைப் பகிர்ந்தளிப்பதிலிருந்து அதன் விதிகள் மூலம் தடுக்கப்பட்டிருப்பின், கொடுக்கப்படுதல் வேண்டும் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும்.

*கலைப்பின் போது எஞ்சியுள்ள சொத்து.*

**13.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும், இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்கள்மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமைகோருபவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களின் உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**14.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்